(ஒன்பதாவது பாராளுமன்றம் — ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 16.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 ஏப்ரல் 24 புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

கௌரவ **கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

கௌரவ **டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ செல்வராசா கஜேந்திரன்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ சட்டத்தரணி உதயன கிரிந்திகொட**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

கௌரவ மனோ கணேசன்

கௌரவ வீரசேன கமகே

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மைத்ரீபால சிறிசேன

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. புதிய உறுப்பினர்களின் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை:** அநுராதபுர தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் , கௌரவ எம். ஜீ. வீரசேன சட்டத்தினால் வேண்டப்பட்டவாறு உறுதிப்பிரமாணம் செய்து சபாபீடத்திலுள்ள புத்தகத்தில் கையொப்பமிட்டார்.

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எச். நந்தசேன அவர்களது மறைவினால் அரசியலமைப்பின் 66(அ) உறுப்புரையின் பிரகாரம் 2024 ஏப்ரல் 04 ஆம் திகதியிலிருந்து இப்பாராளுமன்றத்தின் உறுப்புரிமையில் வெற்றிடமொன்று ஏற்பட்டதாக இச்சபைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர்களது மறைவினை இப்பாராளுமன்றத்திற்கு நான் மிகவும் கவலையுடன் அறியத்தருகின்றேன். அவரது திடீர் மறைவினால் எமக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து நாம் அதிகம் வருந்துவதோடு இந்த கௌரவ உறுப்பினரின் குடும்பத்தினருக்கு பாராளுன்றம் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதாக நான் அறிவிக்க விரும்புகின்றேன்.

இது தொடர்பான அனுதாபப் பிரேரணை பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.”

**II**

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 ஏப்ரல் 10 ஆம் திகதி “வங்கித்தொழில் (திருத்தம்)” எனும் சட்டமூலத்தில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**III**

" 'தென்னிலங்கை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிப் பீடம் (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113(2) இன் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களை நான் மேலதிக உறுப்பினர்களாக நியமித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்:-

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நிபுண ரணவக"

**IV**

"'இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்)' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென 113 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு பின்வரும் உறுப்பினர்களை நான் மேலதிக உறுப்பினர்களாக நியமித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன் :-

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ சமன்பிரிய ஹேரத்"

**V**

"'றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்)' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென 113 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு பின்வரும் உறுப்பினர்களை நான் மேலதிக உறுப்பினர்களாக நியமித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன் :-

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ சாந்த பண்டார

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நிபுண ரணவக"

**V I**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமைவாக, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ ஏ.எச்.எம். பௌஸி”

**VII**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமைவாக, கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ மர்ஜான் பளீல்”

**VIII**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமைவாக, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

**IX**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமைவாக, தொழில்நுட்ப அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ சமன்பிரிய ஹேரத்”

**X**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரொசான் ரணசிங்க அவர்கள் 2023 திசம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

**XI**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி 2024 மார்ச் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

**XII**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல் 2024 மார்ச் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

**XIII**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் 2024 மார்ச் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

**XIV**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கஞ்சன விஜேசேகர 2024 மார்ச் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

**3. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:**(1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2021 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XXVI மற்றும் XXVII ஆம் பகுதிகளையும்;

(ii) 2022 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XXVI ஆம் பகுதியையும்; மற்றும்

(iii) 2023 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் I ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கையின் எட்டாவது தொகுதியினது – IV ஆம் பகுதி — இலங்கையின் தேசிய பூங்காக்களிலுள்ள மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாக்கும் நடைமுறையினை மதிப்பீடு செய்தல் தொடர்பான சுற்றாடல் கணக்காய்வு அறிக்கையினை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 16 ஆம் திகதிய 2371/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(ii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 16 ஆம் திகதிய 2371/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(iii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 16 ஆம் திகதிய 2371/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்;

(iv) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சவுதி அரேபிய இராஜியத்தின் அரசாங்கத்திற்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பைத் நீக்குவதற்கும் வரி செலுத்தாது தட்டிக் கழித்தல் மற்றும் தவிர்ப்பு என்பவற்றைத் தடுப்பதற்குமாக 2023 சனவரி 26 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை; மற்றும்

(v) 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மார்ச் 19 ஆம் திகதிய 2376/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் மற்றும் உடன்படிக்கை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2024 ஏப்ரல் 19 ஆம் திகதிய 2380/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தை சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(7) கல்வி அமைச்சர்—

(i) 2022 ஆம் ஆண்டுக்கான வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) லிமிடெட்டின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10 ) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11 ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஹதபிம அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12 ) நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்—

(i) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 27 ஆம் திகதிய 2360/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(ii) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 13 ஆம் திகதிய 2371/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகளை நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13 ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 01 ஆம் திகதிய 2360/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 01 ஆம் திகதிய 2360/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(iii) (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 8 மற்றும் 22 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 95 மற்றும் 96 ஆம் பிரிவுகளின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் சுற்றுலாத்துறை மற்றும் காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 34 ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியல்கள் தொடர்பாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2024 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2373/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தின் 77 அ பிரிவின் (6) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2023 நவம்பர் 27ஆம் திகதிய 2360/21 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி டப்ளியூ.டி.ஜே. செனெவிரத்ன குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) புப்பிலிய, தம்பகொல்ல, இல. 72 இல் வதியும் திரு. பீ.எம். ஹீங்பண்டாவினது 2024.03.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரோஹண திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(2) (i) மஹரச்சிமுல்ல, கல்கமுவ தெற்கு, கடேவத்த எனும் முகவரியில் வதியும் திருமதி கே.ஏ.டப்ளியூ. விஜயானியினது 2023.11.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கொகரெல்ல, இஹலகம, கொடகம எனும் முகவரியில் வதியும் திரு. என்.பி. சமந்த விஜேசேகரவினது 2023.10.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சாந்த பண்டார சமர்ப்பித்தார்.

(3) (i) பெலவத்த, மிரிஸ்வத்த, இல. 402 இல் வதியும் திரு. இந்திக்க பிரபாத் ஜயசிங்கவினது 2024.02.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) எல்லகொட, மடல, இல. 220 இல் வதியும் திரு. கே.வீ. அனுரகீர்த்தியினது 2024.03.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) எல்லகாவ, வலலியெத்த, இல. 80/7 இல் வதியும் திரு. டப்ளியூ.ஏ.ஏ.டி. புஷ்பகுமாரவினது 2024.01.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ விஜித ஹேரத் சமர்ப்பித்தார்.

(4) (i) அம்பிட்டிய, விசேட கல்வி மத்திய நிலையம் எனும் முகவரியில் வதியும் திருமதி ஏ.எம்.ஏ. குமாரி அபேசேகரவினது 2024.02.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) ஹந்தெஸ்ஸ, ஹியாராபிட்டிய, இல. 72 இல் வதியும் திரு. பீ.ஜி. விக்கிரமசிங்கவினது 2024.02.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சட்டத்தரணி வஸந்த யாபாபண்டார சமர்ப்பித்தார்.

(5) ஹெட்டஹெத்த, மாரம்பே, இல. 115 இல் வதியும் திரு. நந்தசேன கம்லத்தினது 2024.03.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ காமினி வலேபொட சமர்ப்பித்தார்.

(6) வெல்பல்ல, கணன்கெட்டே எனும் முகவரியில் வதியும் திரு. எச்.டி. ரன்ஜனினது 2024.02.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சமன்பிரிய ஹேரத் சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. பாராளுமன்ற அமர்வுகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 10.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டிற்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 10.41 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் அதற்கமைய இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட்டது.

“சட்டமூலம் முழுப்பாரளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 7 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும்:

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. “சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

அதற்கமைய சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**8. நஞ்சு வகைகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்: நீதி**, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— (218 ஆம் அத்தியாயமான) நஞ்சு வகைகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 77அ(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 27 ஆம் திகதிய 2360/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒத்திவைப்பு (உயிர்த்த ஞாயிறுத் தாக்தலின் பின்னணியிலுள்ள உண்மையை வெளிக்கொணருவதிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதிலுமுள்ள தாமதம்):** ''இப்பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக'' என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ ஜகத் சமரவிக்ரம தலைமை தாங்குவாராக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 12.57 மணிக்கு கௌரவ ஜகத் சமரவிக்ரம தலைமை தாங்கினார்.)

"கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக்க தலைமை தாங்குவாராக" என கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா பிரேரிக்க, அதனை கௌரவ நிரோஷன் பெரேரா அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.42 மணிக்கு கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக்க தலைமை தாங்கினார்.)

"கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்குவாராக" என கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப 4.29 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. அதிலிருந்து விவாதம் 2024 ஏப்ரல் 25 ஆம் திகதி வியாழக்கிழமை தொடரும்.

அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே, சபைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2024 ஏப்ரல் 25 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.